# பகவத்கீதா விஷயார்த்த பிரதீபிகா.

ஸம்ஸ்கிருத புராண இதிஹாஸ உபந்கியாசகர்,

திருவிசநல்லூர்,

[illegible] ஸாஸ்திரியார்

இயற்றியது.

அருணாசல முதலியார் நினைவாக அன்பளிப்பு. அளித்தவர்: சியாமளா அருண[illegible] சீர்காழி. ([illegible]2)

புதுப்பதிப்பு.

சென்னைப்பட்டணம்

ஸ்ரீநிகேதன அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

(இதன் விலை) (1-அணா.

*All Rights reserved.*

1908.



சுபமஸ்து.

நிதாய ஹிருதி கோபேசம் விதாய குருவந்தநம்!
கிரியதே பகவத்கீதா விஷயார்த்த பிரதீபிகா॥

# 1-வது பகவத்கீதையின் பெருமை.

பகவத்கீதை உலகிலுள்ள ஜனங்களுக்கு அருமையான விஷயமாயுள்ளது. பகவத்கீதை என்பதற்குப்பொருள் பகவனுல் சொல்லப்பட்டது என்றேற்படுகின்றது.

தர்மத்தை நிலைநிறுத்த உலகில் ஸ்ரீமந்நாராயணன் கிருஷ்ணவதாரஞ்செய்தனர். அக்காலத்தில் கௌரவர்களென்றும் பாண்டவர்களென்றும் இருதிறத்தார்களிருந்தனர். அவ்விருதிறத்தார்களும் நாட்டைக்குறித்துப் போர் புரிந்தனர். பாண்டவர்கள் பக்ஷம் கிருஷ்ணபகவான் சேர்ந்தனர். பாண்டவர்களில் அர்ஜுநனென்பவனொருவன்; அவன்மிக்க யுத்தசாமர்த்தியம் அடைந்தவன். அவனுக்கு கிருஷ்ணபகவான் சாரத்தியம் புரிவதாயுடன்பட்டனர். அர்ஜுநன் கிருஷ்ணபகவானைச் சாரதியாக அமைத்துக்கொண்டு குருக்ஷேத்திர மென்னும் இடந்தனில் கௌரவர்களுடன் போர் புரிவதென்று வந்தனன். அங்கு தன்னுறவினர்களும் ஆசிரியர்களும் சிநேகிதர்களுமிருக்கக் கண்டு, அவர்களுடன் போர்புரிய மனமில்லாமல் வில்லைக் கீழேவைத்துவிட்டனன். அத்தருணம் பகவான் அவனுக்கு யுத்தஞ் செய்யவேண்டுமென்றும், யுத்தஞ்செய்து அவர்களை மடிப்பது யுக்தமென்றும், அப்படி யுத்தஞ்செய்து மடிப்பதனுல் எவ்விதபாவமும் [illegible]ராதென்னும்நீதிகளை அறிவித்தும், சரீரத்திற்கும் ஆத்துமாவுக்கும் [illegible]தும் சம்பந்தமில்லை என்றும் பலவிதமாய் நீதிமார்க்கங்களையும் வேதாந்த இரகசியங்களையும் அச்சமயத்தில் போதித்து அர்ஜுநனை யுத்தஞ்செய்யச் செய்தார். அர்ஜுநன் அவ்வி[illegible]மே யுத்தஞ்செய்து மேன்மையை அடைந்தனன். ஆகவே பகவான்

அருளிய விஷயங்கள் அடங்கியது பகவத்கீதை என்றேற்படுகின்றது. இப்பகவத் கீதையில் அநேக அருமையான விஷயங்கள் அடங்கியுள்ளன. அவைகள் கீழ்வருமாறு அறிவிக்கப்படும்.

## 2-வது, ஸாங்கிய யோகம்.

அர்ஜுநன் யுத்தஞ்செய்ய மனமற்று நிற்க, பகவான் அர்ஜுநனுக்கு உலகத்தில் இயல்பாய் உள்ள குணங்களையும் அவைகள் நடத்தப்படவேண்டிய கடமையையும்பற்றி அறிவித்தனர். அதுவே சாங்கியயோகம் என்னப்படும். ஸாங்கியம், என்றால் பரமார்த்தம்; யோகம் என்றால் அடைதல்; ஆகவே, பரமார்த்தம் அடைதல் எனப்பொருள்பட்டு "சாங்கியயோகம்" என்றேற்பட்டது. ஸாங்கிய யோகத்தினால் பகவான் அறிவித்ததாவது:-

அர்ஜுநா! உனக்கேன் இந்தப்பிரமை; பண்டிதர்கள் இவ்விதம் துக்கம் அடையமாட்டார்கள். பண்டிதர்களுக்கு இறந்தவனென்றும், இருப்பவனென்றும், கொல்லப்பட்டவனென்றும் கிடையாது. ஏனெனில், இவர்கள், சுகம், துக்கம் என்பதும், இரப்பு என்பதும், ஜநநம் என்பதுவும் சரீரத்திற்கல்லாமல் ஆத்துமாவிக்கில்லை என்றும், ஆத்துமா நித்தியமென்றும், அதற்கு, பிறந்தது இறந்தது இனிப்பிறக்கப்போகின்றது என்பவை இல்லையென்றும் உணர்வார்கள். இச்சரீரத்திலேயே நாளடைவில் சைசவம், கௌமாரம், யௌவநம், கிழத்தனம் முதலியவை எப்படி ஏற்படுகின்றனவோ, அந்தந்த காலங்களில் எப்படி சகஜமாகின்றனவோ அப்படியேதான் மரணமென்றும், மறுபிறப்பென்றும் அறிவார்கள்.

உலகில் பஞ்சபூதங்கள், (பிருதுவி, அப்பு, தேஜஸு, வாயு, ஆகாசம்) அவைகளின் குணங்களாகிய மணம், சீதம், உஷ்ணம், ஸ்பர்சம், சப்தம் இவைகளோடு சுகம் துக்கம் இவைகளை, இச்சரீரத்தினிடமாயுள்ள இந்திரியங்களுக்கு (கண், மூக்கு, காது, துவக்கு, நாக்கு) கொடுப்பதாகும். ஆனால் அச்சுகதுக்கங்கள் அலைகளைப்போல் முன்னும்

பின்னும் மாறிவரும் தன்மை யுடையன. பண்டிதர்கள் அவ்விஷயம் அறிந்து சுகதுக்கங்களை சமமாக நினைப்பார்கள். அப்படி நினைப்பவர்களுக்கே மோக்ஷம் ஏற்படும். அவர்களே தீரர்க ளெனப்படுவார்கள்; மேலும் இச்சரீரம் அசத்தென்றும், ஆத்துமா சத்தென்றும் சொல்லப்படும். அசத்து எப்பொழுதும் அழியக்கூடியது என்றும், சத்து எப்பொழுதும் இருக்கக்கூடிய தென்றும் புத்திமான்களால் அறியப்பட்டது. அது எப்படி எனில் தோண்டி உடைந்தாலும் அதனுள் உள்ள ஆகாசம் அழியவில்லை. அதுபோல சரீரத்திற்கே நாசம் என்றும், எவையும் ஆத்துமாவிற்கு எவ்விதமான துன்பங்களைச் செய்யவொண்ணு தென்றும், அது என்றைக்கும் உளதென்றும் சொல்லப்பட்டது. அகவே, கொல்லுகிறேன், அய்யோ! என்னால் கொல்லப்பட்டு மடிகின்றதே என்று நினைப்பது பேதமையாகும். ஞானிகள் இச்சரீரம் ஒழிந்துபோவதில் சந்தோஷம் அடைவார்களே யல்லாமல் துக்கமடையமாட்டார்கள். ஏனெனில், ஒருவன் உடுக்கும் துணிகள் அழுக்காயின் எவ்விதம் அவைகளைக்கழற்றி மற்றொன்றை போர்த்துக்கொள்ள மனமடைந்து அவ்விதமே செய்வானோ அவ்விதமே ஆத்துமாவும் மெலிந்து தளர்ந்த இத்தேகத்தைப் போக்கிப் புதிய உடலைப்பெறுவதாகும். ஆனால்,ஆத்துமாவைக்குறித்து துக்கப்படவில்லை; உடலைப்பற்றித்தான் துக்கப்படுகிறேன் என்றாலும், அப்படி துக்கப்படுவதனால் என்ன பயனாகும். சரீரம் வெட்டப்படாவிடினும் அது என்றைக்கும் நசித்தே ஆகவேண்டும்; ஏனெனில்,உலகில் பிறந்தோன் இறக்கவே வேண்டும். இறந்தவன் கர்மபந்தத்தினால் பிறக்கவேவேண்டும். ஆகையினால் அவசியம் நடக்க வேண்டிய விஷயங்களில் துக்கப்படுவது அவிவேகமேயாகும். ஆனால், நாசம் அடையவேண்டியதாயின் இயல்பாகவே நாசமடைவதாகும். நான் அதன் நாசத்திற்குடன்படுவது தகாதெனில் அவ்விதமன்று உலகில் சரீரம் அடைந்த ஒவ்வொருதேகியும் அச்சரீரத்திற்குரிய ஜாதி, முறை இவைகளை அடைகின்றான். ஜாதிபேதம் தேகத்திற்குத்

தான். ஆத்துமாவிற்கில்லை. அவ்வித ஜாதி ஏற்பட்டபோது அந்தந்த ஜாதி முறைக்குரிய தர்மங்களை செய்யக்கடமை யடைந்ததாகின்றது. ஆகையினுல், அர்ஜுநா! நீ சரீரத்தினுல் க்ஷத்திரியனுகின்ருய்; க்ஷத்திரியனுக்குரிய தொழிலாகிய யுத்தத்தைச் செய்து எவனையாகிலும் பக்ஷபாதமில்லாமல் கொல்லுவதே யுக்தமாகும்; அவ்விததர்மத்தை மேற்கொள்ளுவதே சுதர்மமாகும். அச்சுதர்மத்தைச் செய்யாதவர்கள் நரக மடைவதுடன் இகத்திலும் அபகீர்த்தியடைவார்கள். சுவதர்மத்தில் பாபம் ஏற்படாது. ஏனெனில்,வைத்தியன் தன் தொழிலுக்கிணங்க ரோகிஷ்டனுக்குக் குரூரமான சிகிச்சை செய்யினும் அச்சிகிச்சை எப்படி பாபத்திற்குரியதாகாதோ, அவ்விதமேயாகும். மேலும் ஒருவனும் தான் செய்கின்ற கர்மத்தில் பலனை எதிர்பார்க்கலாகாது. தான்செய்யும் கர்மத்தை தன்கடமை என்றே செய்யவேண்டும். பலனை எதிர்பார்த்துக் கர்மத்தைச்செய்பவர்கள் தீனர்களாவார்கள். பலனை எதிர்பாராமல் செய்பவர்கள் ஜன்மபந்தத்தினின்றும் விடுபடுவார்கள். எவன் கோரிக்கைகள் யாவையையும் விட்டுத்தனக்குத்தானே திருப்தியடைந்தவனே அவன் ஸ்திரப்பிரஞ்ஞன் என்னப்படுவான். அவனேதான் எப்பொழுதும் துக்கத்தில் துக்கப்படாமலும் சுகத்தில் சந்தோஷமடையாமலும் காமம், குரோதம் முதலியவைகளை ஒழித்தவனுகின்ருன். அவனே முனி என்றும் சொல்லப்படுவான். எவன் சுபாசுபங்களை அடைந்து அவைகளில் பற்றுதல் அடையாமலும் சுகதுக்கவிஷயங்களைப்பாராமலுமிருக்கின்ருனே, எவன் ஆமை, தன் அவயவங்களை இழுத்துக் கொள்ளுவதுபோல் தன்னிந்திரியங்களை விஷயங்களினின்று தடுத்துக்கொள்ளுகின்ருனே அவனேபண்டிதன். ஆனுல் உலகில் ஒவ்வொருவனைக்கெடுப்பது மனமேயாகும்.மனம் இந்திரியங்களைத்தன் வசம் செய்து அவைகளை அநேக விதமாய்ப்போகச்செய்யும். ஆகவே அம்மனத்தை நிறுத்தி அதனுல் இந்திரியங்களை ஓர் வழிநிறுத்துகின்றவனுக்கே ஞானம் உண்டாகும். உலகில் ஒவ்வொருவனும்

தன்கர்மத்தைவிட்டுக்கெட்டுப்போவதற்கு மனமே காரணம். ஏனெனில், மனம் ஒன்றைவேண்டநினைக்கும். உடனே விஷயங்களில் புகும். விஷய வாசனையினால் காமம்; அதாவது - ஆசைஉண்டாகும். ஆசையினால் கோபம், கோபத்தினால் மூடத்தனம், மூடத்தனத்தினால் மறப்பு, அதனால் புத்திக்குறைவு, அதனால் அழிகின்றான். ஒருவன்புத்தி ஸ்திரமாவதற்குஇந்திரியங்களை அடக்கிஇராகத்துவேஷங்களைவிட்டு விஷயங்களில் பிரவிர்த்தியடையாமலிருக்க யத்தனிப்பதனால்,சாந்தி-அதாவது-ஓய்வு அடைந்துமேன்மையடைவான்.

## 3-வது கர்மயோகம்.

கர்மம்என்றால்,தொழில்; யோகம் என்றால் அடைதல்; ஆகவே, தொழில்அடைதல் என்னும்பொருள்பட்டுக்கர்மயோகம் என்றுசொல்லப்பட்டது. கர்மம் செய்வதினால் என்னபயன்;- அதைச்செய்யாவிடில் என்ன கெடுதல்:- கர்மமில்லாமலே ஞானத்தினால் மேன்மையை அடையக்கூடாதா எனில், கர்மமில்லாமலே மோக்ஷம் பெறலாம்; ஆனால், கர்மமில்லாமலே மோக்ஷம்பெறுவது அரிதாகும். ஏனெனில், மோக்ஷம் ஏற்பட நினைப்பவனுக்கு ஞானம்வேண்டும். அவ்விதஞானம் கர்மத்தினாலல்லாமல் வராது. ஆத்துமஞானம் உடையவர்களுக்கு ஞானமேபோதும். அவ்வித ஞானமில்லாதவர்களுக்குக் கர்மமே வேண்டும். அது எவ்விதமெனில், இயல்பாய் ஒளிக்கின்ற சூரியனுக்கு ஒளி உண்டாக்கவேண்டிய அவசியமில்லை. ஒளியில்லாத வஸ்துவினிடம் உறைப்பதாகிய கர்மமே வேண்டும். மேலும் கர்மம் எவன் செய்யாமலிருக்கின்றான்; பிரகிருதி குணங்கள் (சத்துவம் ரஜஸ் தமஸ்)ஒவ்வொருவனைக்கர்மம்செய்யத்தூண்டும். கேவலம் கர்மேந்திரியங்களால் செய்வதே கர்மம் என்பதல்ல. மனதினால் நினைப்பதும் கர்மமேயாகும்; கண், காது முதலியவைகளை வெளிக்கு அடக்கி ஒரு கர்மம் செய்யாதவனாக நினைத்து மனதால்நினைப்பவன் பாபியாவான். எவன் மனதினால் இந்திரியங்களை அடக்கி கர்மேந்திரியங்களால் கர்மங்களைச் செய்கின்றானோ அவன் ஞானியாவான்.

ஒவ்வொருவனும் கர்மம் செய்யவேண்டுமென்பது கடமையாகின்றது. ஏனெனில், ஒருவன் பசியுள்ளவனாயின் போஜனம் செய்வதாகிய கர்மத்தைச்செய்யாவிடில் பசிதீராது. ஆகவே, கர்மம் முக்கியமாகின்றது. கர்மங்களில் சில உடனே பலனைத்தருவதாகும்; சில காலாந்தரங்களில் பலனைத்தருவதாகும்; காலாந்தரங்களில் பலனைத்தரப்பட்டவைகள் யக்கியம், தானம் முதலியவைகளாகும்.

பிரமன் உலகைச் சிருஷ்டித்து ஜனங்கள் சுகமடைவதற்கு யாகம் முதலிய கர்மங்களை ஏற்படுத்தி அக்கர்மங்களைச்செய்யும்படி அறிவித்திருக்கின்றார். யாகஞ்செய்தால் தேவர்கள் திருப்தியடைந்து ஜனங்களுக்குப் பிரதிபலனைத் தருகின்றார்கள். அது எப்படி எனில், உலகம் அன்னத்தாலுண்டானது, அன்னம் பர்ஜந்யம் அதாவது-மேகத்தால் உண்டானது; மேகம் யாகத்தாலுண்டானது; யாகம் கர்மத்தாலுண்டானது; கர்மம் பிரும்மாவினிடமாய் உண்டானது; பிரும்மம் அக்ஷரத்தினாலுண்டானது; அக்ஷரம் பிருமத்தினிடமாயுண்டானது. எவன் அவ்வித யக்கியம் செய்யாமல் கேவலம் புஜிப்பவனாகவே யிருப்பானோ அவன் பாபியும் துக்கியும் ஆவான்.

எவன் ஆத்துமஞானமடைந்தவனோ அவன்யக்கியஞ்செய்யாவிடினும் தோஷமில்லை. ஏனெனில் அவனுக்குஆகவேண்டியது ஒன்றுமில்லை. அவன் ஆத்மதிருப்தனாயிருக்கின்றான். ஆகிலும் அவர்களும்கர்மம் செய்வார்கள். அவர்கள்செய்வதிலும் ஆத்ம ஞானம் இல்லாதவர்கள் செய்வதிலும் பேதம் யாதெனில், அவர்கள் பலாபேக்ஷையில்லாமல் உலகஜனங்கள்நிமித்தமேசெய்வார்கள். அதற்கு ஜநகர், அசுவபதி முதலியவர்களே காரணமாகின்றார்கள். அவர்கள் என்செய்தார்கள் எனில், உலகம் எவ்விதமிருக்கிறதென்றால் ஒருவன் செய்வதைப்பார்த்துச் செய்பவர்களேயல்லாமல் யுக்தாயுக்தம் அறிந்து செய்பவர்களல்லர். ஞானிகளும் ஆத்மஞானத்தினால் கர்மம் அநாவசியமென்றுடன்பட்டுவிடுவோர்களாயின் ஜனங்களும்அவர்களின் பெருமையறியாது நமக்கும் அவசியமில்லையென்று நினைத்து கர்மஞ்செய்யாமலே கர்ம

பிரஷ்டர்களாய்விடுவார்கள்; முக்கியமாய் கவனிக்குங்கால் கர்மம் பிரகிருதியின் குணங்களால் தூண்டப்படுகின்றது. ஆகையினால் ஞானி தான்செய்கின்ற கர்மத்தில் தான் கர்த்தா என்று நினைக்கமாட்டான். மூடன் தன்குணங்களிலும் கர்மங்களிலும்உடன்பட்டுச்செய்பவன் என்று கர்வங்கொள்வான். கர்மம் செய்வதில்இந்திரியங்களை அடக்கியவனாகவேண்டும். ஏனெனில், அவ்விந்திரியவிஷயங்களுக்கு இரண்டு துர்க்குணங்கள் உள. அவை ராகம்(ஆசை) துவேஷம்(விரோதம்) என்பவை. கர்மம்செய்வதிலும் அவனவன் செய்யவேண்டிய கர்மத்தைச்செய்வதே அவனவனுக்கு க்ஷேமத்தைத் தருவதாகும் ஒருவன் தர்மம், குரூரமாயினும் மரணத்தைத் தருவதாயினும் தாழ்ந்ததாயினும், அதைச்செய்வதே நலமாகும்.

பகவானைக்கிருஷ்ணன் கேட்பது பாவம் ஏன் மனிதன் செய்கிறான் அவன் செய்யவேண்டாமென்று நினைத்தாலும் செய்யவேண்டியவனாகின்றான். அது எதனால் தூண்டப்படுகின்றது?

பகவான் அறிவிப்பது:- ரஜோகுணத்தினாலும் தமோகுணத்தினாலும்பிறந்தவை காமம்குரோதம்லோபம்முதலியவை. அக்குணங்களே மனிதனுக்கு சத்துருவாக விருந்து பாபத்தைச் செய்விக்கின்றன. அதனால் அஞானியும் ஆகின்றான். அது எப்படி எனில், கண்ணாடி சுத்தமாயினும் அழுக்கினாலும் நெருப்புப் பிரகாசமுள்ளதாயினும் புகையினாலும் மூடப்பட்டு முறையே மலினமாயும் மந்தமாயும் ஆகின்றது. ஒருவன் ஞானம், காமம், குரோதம் முதலியவைகளாலேயே கெடுகின்றது. அக்காமக்குரோதம் முதலியவைகளை எப்படிப்போக்கி ஞானத்தைக்கெடாமற்படி செய்து மேன்மையடைவதெனில், காமம்முதலிய குணங்களுக்கு இந்திரியங்கள் அதிஷ்டானம்; அதாவது-இருப்பிடம். அவைகளு' கிருப்பிடமாகிய இந்திரியங்களையடக்கி, பாபஸ்வரூபமாகிய காமக்குரோதங்களை வேரறுத்துத்தள்ளவேண்டும்.

ஆகவே, முடிவாகச்சொல்லுவது, கர்மம் அவசியம். ஒவ்வொருவனும் தன் தன் கர்மத்தைச் செய்யவேண்டியது. கர்மம் செய்வதனால் ஞானம் ஏற்படுகின்றது. அவ்வித ஞானத்திற்கு சத்துருக்கள் காமக்குரோதம்முதலியனவைகளைப் போக்கவேண்டும். அவைகளைப் போக்கவேண்டின் அவைகளுக்கு ஆச்ரியமான இந்திரியங்களை அடக்கவேண்டும்; இந்திரியங்களை அடக்கவேண்டுமாயின் அதன் ஆச்ரியமான மனத்லைத அடக்கவேண்டும். மனதை அடக்கவேண்டுமாயின் அதன் ஆச்ரியமான புத்தியை அடக்கவேண்டும். அவ்விதம் செய்பவன் பரமாத்ம சுவரூபம் அடைந்தவன்ஆவான். அவன் எக்கர்மம் செய்யினும் அவனை பாபம் முதலியவை அணுகா.

## 4-வது, ஞானயோகம்.

ஞானம் என்றால் அறிவு, யோகம் என்றால் அடைதல், அறிவை அடைதல் என்னும் பொருள்பட்டு ஞானயோகம் எனப் பேர் பெற்றது. அர்ஜுனனுக்கு பகவான் அறிவிப்பது:- அர்ஜுனா!

உலகில் என்னை எவன் ஆசை கோபம் முதலியவைகளை ஒழித்து ஞானதவத்தினால் உபாசிக்கின்றானோ அவன் பாபத்தினின்றும் விடுபட்டவனாய் என்னிலைமையை அடைவான். என்னை எவனெவன் எவ்வெவ்விதமாய் பஜிக்கின்றானோ அவனவனுக்கு அவ்வவ்விதமாயிருந்து அவரவர்கள் இஷ்டத்தைப் பூர்த்திசெய்பவனாவேன்.

எவர்கள் கர்மபலத்தைநாடி என்னைவேறு என்றுநினைத்து யாகம் முதலிய கர்மங்களைச் செய்கின்றார்களோ அவர்கள் அக்கர்மபலங்களையும் பெறுவார்கள். ஆனால் அவ்வித கர்மத்தின் பலனை எதிர்பாராமலும், தான் கர்த்தா போக்தா என்றும் நினைக்காமலும் கர்மங்களைச் செய்கின்றானோ அவன் ஜந்மபந்தமும் கர்மபலன் தீர்ந்த காலத்தில் துக்கபலனையும் அடையமாட்டான்; அவ்விதமாய் நினைத்துச் செய்பவவர்கள் பலர் உளர். அவர்களோ முமுக்ஷுக்கள். முமுக்ஷுக்களும்,எவைசெய்யத்தகுந்தகர்மங்கள் எவைசெய்யத்தகா

த கர்மங்கள் என மோகமடைந்தனர்கள். ஆகையினால் கர்மம், அகர்மம், விகர்மம் முதலியவைகளை அறியவேண்டும். ஆனால் இவைகளில் அகர்மத்தில் கர்மத்தையும், அதாவது-கர்மம் செய்துகொண்டே ஆத்மஞானத்தையும் அகர்மத்தில் கர்மத்தையும், அதாவது—ஞானமிருந்தும் கர்மத்தையும் எவன் செய்கின்றானோ அவனே புத்திமான். எவன் கோரிக்கையற்ற ஞானமாகின்ற அக்கினியினால் கர்மத்தை எரித்து, அதாவது—ஞானத்துடன் கர்மத்தைச்செய்கின்றானோ அவன் பண்டிதன். ஆத்ம திருப்தனாயிருப்பவன் கர்ம பலனை ஒழித்து கர்மத்தையேசெய்பவனாயினும் கர்மம் செய்யாதவனேயாகின்றான். ஆசையற்றும் அடக்கிய மனதையுடையவனும், பற்றற்றவனும் ஆகிய புருஷன் சரீரபோஷகமான காரியங்களைச்செய்பவனாய்க் கர்மங்களைச் செய்தாலும் பாபம் முதலியவை அணுகாதவனாகவே ஆகின்றான். கிடைத்தவரையிலும் சந்தோஷமடைந்தவனும் கோபம் அற்றவனும்,கிடைத்தாலும் கிடைக்காமற்போனாலும் சமமாய் நினைப்பவனுமாகிய புருஷன் கர்மத்தைச் செய்தவனாகிலும் பந்தம் அடையான்; அவிவேகிகள் அக்நி என்றும் அதற்கு ஓமம் செய்வதென்றும் அவிஸ்ஸென்றும் பல பேதங்கள் நினைத்து ஓமம் செய்து கர்மத்தை ஆசரிப்பார்கள். ஞானிகளோ யாவையும் பிரும்மமாக நினைத்து கர்மம் செய்வார்கள். ஞானிகள் அக்நி முதலியவைகளைச் சாதநமாக கொள்ளாமல் ஞானத்தில் இந்திரியங்களை அடக்குவதென்கின்ற அக்நியில் இந்திரியங்களை ஓமம்செய்தும், சப்தம், ரஸம் முதலிய விஷயங்களை இந்திரியங்களாகின்ற அக்நியில் ஓமம்செய்தும் பிரும்மத்தை ஆராதிப்பார்கள். சிலர் இந்திரியங்கள் யாவையையும் பிராணவாயுவு முதலிய தொழில்களையும் மனதை அடக்குவதென்கின்ற ஞானமயமாகிய அக்நியில் ஓமஞ்செய்வார்கள். ஞானிகள் யாகம் செய்வதாகிய கர்மத்தைக்கேவலம் பாஹ்யமாய் அல்லாமல் தங்கள் உள்ளத்திலேயே பலவிதமாய்ச் செய்வார்கள். ஆகையால் ஓமம் செய்யாதவனுக்கு நல்ல உலகம்இல்லையென்பது இதுவேகாரணமாகின்

றது. உலகில்ஞானயக்யமேசிறந்தது. பாஹியகர்மம்செய்யவும் ஞான மேவேண்டும். ஆகையினுல் அவ்விதஞானத்துடன் அந்தரங்கமான ஓமத்தைச்செய்பவன் பாஹியகர்மஞ்செய்ய அவசியமானவனல்லன்; ஆகையினுல், ஒவ்வொன்றும் பரப்பிரும்மாம்சமாகையினுல் சத்துரு வென்றும் மித்துருவென்றும் நினையாமல் ஞானத்தினுல் ஸ்வதர்மத் தைச் செய்பவனே யோகி. அவனுக்குப் பாபம் என்பதில்லை; அவனு க்குக் கர்மங்களென்பதில்லை. அவர்கள் ஞானமாகின்ற ஓடத்தினுல் யாவையும் தாண்டிநிற்பார்கள். ஓமாக்நி எவ்விதம் சமித் முதலியவை களை எறித்து பஸ்மமாக்குகின்றதோ அவ்விதமே ஞானாக்நியும் துஷ் கர்மம் ஸத்கர்மம் எவையாயினும் எறித்துவிடும். உலகில் ஞானத் தைக்காட்டிலும் அதிகப்பட்டதும் முக்தியைத் தரக்கூடியதும் ஒன் றுமில்லை. அவ்வித ஞானம் யாவர்களுக்கும் எற்படாது; கேவலம் படிப்பினுல் ஞானமன்று. ஆத்மாநாத்மஞானம்பெற்று இந்திரியங்க ளை அடக்கும் சாமர்த்தியம் அடைந்து யாவையையும் சமமாய் நி னைப்பதே ஞானம். அவ்வித ஞானமடைந்தவன் சாந்தனுவான். இவ்விஷயத்தில் சம்சயமடைந்தவன் நசிப்பான்; ஆகையினுல் நான் நீ என்றபேதம் அடைந்த மநோபேதத்தை விட்டுச் சம்சயத்தையும் வேரறுத்து எவன் ஆத்துமஞானத்தினுல் கொல்லப்பட்டவன், கொ ல்லுபவன் என்னும் பேதங்களைவிட்டவனே அவனே முக்தன், அவ னே ஞானியாகின்றுன்.

## 5-வது. கர்ம ஸந்நியாஸ யோகம்.

கர்மம் என்றுல்தொழில், ஸந்நியாஸமென்றுல் விடுகை, தொழி லைவிடுகை என்னும் பொருள்பட்டு கர்மஸந்நியாசம் எனச் சொல்லப் பட்டது.

அர்ஜுநன் கிருஷ்ணபகவானைக்கேட்பது:-

கிருஷ்ணு! கர்மத்தைச் செய்யவேண்டுமென்கிருய்; மறுபடியும் கர்மம் வேண்டுவதில்லையென்றும் சொல்லுகின்றுய். இவ்விரண்டில்

எதைச்செய்வது, எதைவிடுவது. எனக்கு சந்தேகம் உண்டாகின்றது. இவ்விரண்டில் எது நலம் அதைச்சொல்லவேண்டும். கிருஷ்ண பகவான் அறிவித்தது.

அர்ஜுனா! கர்மம் செய்யாமலிருக்கை, கர்மம் செய்கை ஆகிய இவ்விரண்டும் மோக்ஷத்தைத் தரக்கூடியவைகள். ஆகிலும், கர்மம் செய்கை சிறந்தது. எவன் ஒருவனைப் பகைக்காமலும் ஒன்றைவிரும்பாமலும் வேறுபாவனை அடையாமலும் இருக்கின்றானோ அவனே கர்மங்களினின்றும் விடுபட்டு சுகமடைவான். சிலர் சாங்கியயோகம் (ஆத்மஞானம்) சிறந்ததென்பார்கள். அவ்விதமாய் எவன் எதை உறுதியாகநம்பி ஒன்றையே செய்கின்றானோ அவன் கர்மயோகம், கர்ம ஸந்நியாசம் என்ற இரண்டின்பலன்களையும் பெறுவான். ஸந்நியாசம் கர்மயோகமில்லாமல் கிடைப்பதரிது. அப்படிக்கிடைத்தாலும் ஸந்நியாசத்தினால் சுகம் கிடைப்பதரிதாகும். ஸந்நியாசம் இல்லாவிடினும் யோகம்செய்பவனே சீக்கிரம்முக்திபெறுவான். ஞானி இந்திரியங்கள் விஷயவியாபாரத்திற்சென்றாலும் அவைகளைத்தான் உணராது கர்மங்களைச் செய்பவனாக விருந்தும் செய்யாதவனாகவே ஆவான். பிரும்மத்தினிடம் மனதை நிறுத்தி கர்மத்தைச்செய்பவன் பாபம் முதலியவைகளை அடையான். தாமரை இலையில்ஜலமிருந்தும் படாமலிருப்பதுபோல் ஆவான். ஈசுவரனைக்குறித்துக்கர்மம்செய்கின்றேன் என்று செய்பவன் யுக்தன். பலனை எதிர்பார்த்துச் செய்பவன் அயுக்தன். ஈசுவரார்ப்பணமாகச்செய்பவன் முக்திபெறுவான். பலனை அபேக்ஷித்தவன் பந்தத்துக்குள்ளாவான். ஆத்மாவுக்குச்செய்பவன், செய்யப்படுகிறவன், செய்விக்கின்றவன், பலனைப்பெறுபவன் என்பதில்லை. செய்வதும், செய்யப்படுவதாகியவைகள் இயல்பாக மாயையினால் ஏற்படுகின்றது. மாயை என்பது அஞ்ஞானம். இந்த அஞ்ஞானம் ஞானத்தைமூடி மோகத்தைத்தருகின்றது. எவர்கள் அந்த மாயையாகிய அஞ்ஞானத்தைத்தடுக்கின்றார்களோ அவர்கள்ஞா

னம் சூரியனைப்போல் ஒளித்து, பிரும்ம ஸாக்ஷாத்காரத்தைத்தரும். அவ்விதமான ஞானத்தை அடைந்துதான் ஞானிகள் ஜநன மரண ரகிதமான நிலைமையை அடைந்து முக்திபெற்றனர். படித்தவனிடமும், படியாதவனிடமும், எந்த வர்ணத்தாரிடமும் எவ்விதமான பிராணிகளிடத்திலும் ஒரே பாவனை அடைந்திருப்பார்கள்.

அவ்விதம் சமபுத்தியுடையவர்கள் இங்கேயே சுவர்கம் அடைந்தவர்கள். அவர்களே பிரும்மமும் தோஷமற்றதாகையால், பிரும்ம ஞானி ஆனவர்கள். கிடைத்தால் சந்தோஷமடைவது கிடையாவிடில் துக்கம் அடைவது ஆகிய இவைகள் பிரும்மஞானிகளுக்கு ஏற்படாது. வெளிப்புறமான விஷயங்களில் ஏன் பற்றுதல் கூடாதெனில்; அவைகள் துக்கமூலமாகும்; அழிவையும் தருபவைகளாகும். ஆகையினால் புத்திமான்கள் விஷயாசக்தி யடையமாட்டார்கள். எவன் இச்சரீரமிருந்தும் விஷயசுகங்கள் அடைவதற்கும் சாதனமிருப்பினும் அவைகளைக்கருதாமல், காமக் குரோதம் முதலியவைகளை விட்டு இருப்பவனோ அவனே யுக்தன். அவன்தான் சுகி. அவன்தான் யோகி. அவன்தான் பிரும்மம் ஆனவன். ஆ[illegible] விஷயாசக்தியை அடையுங்குணம்கொண்ட இந்திரியங்களை அடக்கி எப்படி மேன்மை அடைவதெனில், புத்திமான் வெளிவிஷயங்களை வெளியேயே நிறுத்தி; பிராணாபாநவாயுக்களை நிரோதம்(அடக்கி)செய்து மனதை ஒரே இடத்தில் நிறுத்தி நிஷ்டை அடைகின்றானோ அவன் முனியாவான். அவனே முக்தன்.

## 6-வது, ஆத்ம ஸம்யமனம்.

ஆத்ம - என்றால், அந்தக்கரணம். ஸம்யமநம் - என்றால், நன்றாக அடக்குகை. அந்தக்கரணத்தை அடக்குகை எனப் பொருள்பட்டு ஆத்ம ஸம்யமநம் எனப் பேர்பட்டது.

கிருஷ்ணபகவான்அறிவிப்பது:— ஸந்நியாசம்என்பது கேவலம் யாவற்றையும் விட்டுவிடுவது என்பதுஅன்று.கர்மபலனைவிடுவதென்

கிறதே பொருள். கர்மங்கள் யாவையையுஞ் செய்து கர்மபல னைத் தள்ளினவன் ஸந்நியாசிஎன்னப்படுவான். அவனேயோகி. கர்மத்தினாலே முனியாகின்றான். அம்முனியே யோகி ஆகவேண்டுமாயின் "சமம்" அதாவது-பஹிரிந்திரியங்களை நிக்ரகம்செய்யவேண்டும். ஒவ்வொருவனும் விஷயங்களில் ஆசக்தியடையாத மனதில் ஆத்துமாவை இரக்ஷித்தல்வேண்டும். ஏனெனில் ஆத்துமாவுக்கு நன்மையைத்தருவது மனமே; தீமையைத்தருவதும் மனமாகின்றது. சீதம், உஷ்ண, மானம், அவமானம் முதலியவைகளை கவனிக்காது யாவையும் வென்ற மனமுடையவனுள்ளத்தில் பரமாத்மா ஒளித்திடும். அவன் ஆத்மாவை அறியவல்லவனாவான்.

ஒவ்வொருவனுடைய ஆத்துமா சுத்தம் அடைய வேண்டுமாயின் இடம், காலம், தேசம் இவைகளை கவனித்து உயரமாயும், தர்பை, அதன்மேல் வஸ்திரம், அதன்மேல் சர்மம், இவைகள் போடப்பட்டதாயும் இருக்கும் இடத்தில் உட்கார்ந்து மனதை ஒரே நிலையில் நிறுத்தி மற்றுள்ள இந்திரியங்களை அடக்கி ஸமாதியோகம் செய்யவேண்டும். பின்னும் சரீரம், சிரசு, கழுத்து இவைகளை நேராக அசையாமல் நிறுத்தி,தன் மூக்குமுனையைப்பார்த்து திக்குகளைப்பாராமல் மனம், புத்தி, சித்தம் இவைகளை அடக்கி ஒன்றுக்கும் பயமடையாமல் பிரும்மசரிய விருதத்துடன் பிரும்மநிஷ்டராய் இருத்தல் வேண்டும். அப்படியே யோகம்செய்பவன் மோக்ஷம் அடைந்து பிரும்மநிலை பெறுவான். காத்தில்லாத விடத்தில் வைக்கப்பட்ட விளக்கின் ஜுவாலை அசையாமலிருப்பதுபோல் மனமடக்கிய யோகியின் ஆத்துமா ஒரே அசைவற்றதாய் நின்றுவிடும். ஆனால் எந்த யோகத்தில் மனம் ஒடுங்குமோ, எங்கு மனத்தினால் ஆத்துமாவைக்கண்டு களிப்பானோ, எந்த யோகத்தினால் பரமசுகத்தை அடைந்தவனாய்அறிவானோ,எந்தசுகத்தைக்கண்டு,அதைக்காட்டிலும்வேறு சுகமில்லை என்றுணர்வானோ, எங்கு எவ்விததுக்கத்திற்கும் சளைக்கானோ அதுதான் யோகம், அவ்விதயோகத்தைதான் செய்தல்வேண்டு

ம்; ஆனால், மனதை அடக்குவது அருமையாகும்; ஆகிலும் அம்மனதை கொஞ்சங் கொஞ்சமாய் விஷயங்களினின்றும் புத்தியின் உதவியினால் விடுதல்வேண்டும்.

பின்னும் ஸ்திரசுவபாவமில்லாத மனசு விஷயங்களில் சென்றாலும் புத்தியினால் அப்போதைக்கப்போது திருத்த, ஆத்துமாவிடத்தில் வசம் செய்யவேண்டும். அவன் தான் பிரும்மாநந்த சுகம் பெறுவான். அந்த யோகி ஆத்மகோடிகளைத் தன்னைப்போலும் தன்னிடத்தில் சகல ஆத்மாக்களும் இருப்பதாய் உணர்வான். எவன் யாவையும் பிரும்மமயமாயும் சகல ஜீவன்களிலும் ஈஸ்வரபாவனையையும், ஒரே உறுதியான பாவனையைச் செய்கின்றானோ அவன் தான் முக்தனும் யோகியும் ஆவான். மனதை அடக்குவது அருமையாகும். ஆனால் அப்பியாசத்தினாலும் வைராக்யத்தினாலும் அதை வெல்லவேண்டும். ஆனால் மனம் நிலையில்லாமல் யோகம் செய்தவனாயினும் அவன் நற்காரியம்செய்த அக்கர்மம் நற்பலனையே தருவதாகும். அவனே பிறகு கர்மபிரஷ்டனாகையினால் மறுபடியும் உத்தமகுலத்திலும் தநிகனாயும் மேன்மையாயும் பிறப்பான். அல்லது மறுபடியும் பூர்வஜந்மவாசனையால் யோகஞ்செய்யத்தொடங்கி கிருதார்த்தனாவான். அஜ்ஜந்மத்திலுங் கைகூடாவிடினும் அநேக ஜன்மங்களிலாவது யோகம் செய்து முடிவில் முக்திபெறுவான். தபஸ் செய்பவனிலும் ஞானியிலும் கர்மம் செய்பவனிலும் யோகியே சிறந்தவன். அவன் எவ்விதத்திலாவது முக்தி பெறுவான்.

## 7-வது விஞாநயோகம்.

விஞானம் என்றால் அறிவு (ஆத்மஞானம்) யோகம் அடைதல் ஆத்மஞானம் அடைதல் எனப்பொருள்பட்டு விஞான யோகம் எனச்சொல்லப்பட்டது. பகவான் அர்ஜுனனுக்குச் சொல்வது.

ஞானம் என்பது-கேவலம் விஷயங்களில் உண்டாகும் திறமை அறிவன்று. பின் பரமார்த்த ஞானமாகும். உலகில் அவ்வித

ஞானமடைந்து ஸித்தியடைய ஆயிரத்தில் ஒருவனேஆவான். அவ்விதம் முயன்றவர்களிலும் எவனோ அரிதாகத்தான் பகவத் ஸ்வரூபத்தை அறிவான். பகவானுக்கு வியதிரிக்தமாய் பிரகிருதிகள் இருக்கின்றன. அவை பூமி, ஜலம், அக்நி, வாயு, ஆகாசம், மநஸ், புத்தி அகங்காரம் என்பவைகளே. அவைகட்குமேற்பட்டு ஜீவஸ்வரூபமான பகவானே யாகும். பகவானாலேயே யாவும் பிறந்தன. பகவானாலேயே இரக்ஷிக்கப்பட்டுச் சங்கரிக்கப்படுகின்றன. மணிகள் கயிற்றில் கோர்க்கப்பட்டதுபோல் யாவும் பகவானையே ஆச்ரயித்திருக்கின்றன. உலகில் சர்வபூதங்களிடத்திலும் உள்ளகுணமும் பகவானுடைய பகவத் ஸ்வரூபமேயாகும். ராஜஸம், தாமஸம், சாத்விகம் என மூன்றுகுணங்களும் பகவானால் சிருஷ்டிக்கப்பட்டன. அவைகள் பகவானுக்குக் கிடையா. இம்மூன்று குணங்களினாலேயே ஜனங்கள் கெட்டுப் பகவத்ஸ்வரூபத்தை அறிவதற்குதடையாகின்றார்கள். இக்குணங்களுக்கே மாயை என்றும் சொல்லப்படும். இம்மாயையே கொடுமையானது. இம்மாயையைக் கடந்தவர்கள் பகவத் ஸ்வரூபத்தை அறிபவர்கள். மூடர்களும் பாவம் செய்தவர்களும் இம்மாயையினால் கட்டுண்டு பகவத் ஸ்வரூபத்தை அறியாமல் போகின்றார்கள். உலகில் பகவானை உபாசிப்பவர்கள் நால்வர்கள். அவர்கள் யாரெனில், துன்பமடைந்தவர்கள், பகவத்ஸ்வரூபத்தை அறியவேண்டுமென்ற பக்தியுடையவர்கள், கர்மபலனைக் கோருபவர்கள், பகவானுடையதத்துவத்தை அறியவேண்டுவர்களேயாம். இவர்களில் பகவானுடையதத்துவத்தை அறிந்தஞானியேசிறந்தவன். மற்றமூவர்களும் பலனைப்பெற்று மறுபடியும் பிறந்து கஷ்டமடைய வேண்டியவர்களாகையினால் அப்பிரியமானவர்கள். அநேக ஜந்மங்களிற் பிறந்தாலும் ஞானம் அடைந்தவன் தான் பகவானை அடைவான். யாவற்றையும் வாசுதேவஸ்வரூபம் என பாவனை ஏற்பட்ட காலத்தில்தான் ஞானி பகவானைச்சேர்வான். அவ்விதஞானம்ஏற்படுவது துர்லபமாகும். அவ்விதமில்லாமல் வெவ்வேறு தேவதையாக பாவனைசெய்து பூஜிப்பவர்கள் அந்தந்த தேவதைகளினிடமாய் பலனைப்பெற்றுப் பிறகு பிறப்பவர்களாவார்கள். பகவான் யோகமாயையுடன் கூடினவராகையினால் அவரை அறிவது அரிதாகும். எவர்கள் பாபமற்றவர்களும் ஞானகர்மத்தைச் செய்பவர்களோ அவர்கள் தான் அறிந்து முக்தியடைகின்றவர்கள்.

## 8-வது அக்ஷரப் பிரும்மயோகம்.

'அக்ஷரம்' என்றால்-நாசமடையாதது; பிரும்மம் என்றால்-பிரும்மம்; யோகம் என்றால் அடைதல். நாசமற்ற பிரும்மத்தை அடைதல் எனப்பொருள்பட்டு அக்ஷரபரப்பிரும்மயோகம் எனப்பேர்பெற்றது.

பிரும்மம் என்பது-அக்ஷரமானது. அப்பிரும்மமே ஒவ்வொரு தேகத்திலும் வெவ்வேறு ஆத்மாவாக ஆவது சுபாவம். தேவதைகளைக் குறித்துச்செய்யும் யாகாதிகளே கர்மமாகின்றது. அக்கர்மாவினாலே மழை ஏற்பட, அம்மழையினால் பூதங்கள் ஏற்படுகின்றன. நசிக்கும் பதார்த்தங்கள் அதிபூதம் என்றும், ஹிரணியகர்ப்பனே புருஷனென்றும், பிராணிகளில் விளங்குகின்ற அந்தராத்மாவாக விளங்கும் பிரும்மமே அதியக்ஞம் என்றும் சொல்லப்பட்டது. எவன் சாகுந்தருவாயில் இச்சரீரத்தைவிட்டுப் பகவானைத்தியானம் செய்தவனாகின்றானோ அவன் அந்நிலைமையையே பெறுவான். அவன் எந்தெந்த பாவனையினால் உயிர்விடுகின்றானோ அவனவன் பாவனைக்குத் தக்கவாறு ஜந்மமெடுப்பவனாவான். ஆகையினால் எப்பொழுதும் பகவானிடமே மனம்நிறுத்தி அக்ஷரபிரும்மத்தையே நினைத்தவனாகவேண்டும். அவ்வித பாவனை அப்பியாசத்தினால் பிறக்கவேண்டும். யோகிகள், ஆசையை விட்டவர்களாய் அப்பாவனையை எளிதாய் அடைவார்கள். எவ்விதமான செய்கையால் எனில், இந்திரியங்களை வெளியில்விடாமற்செய்து, மனத்தை ஹிருதயத்தில் நிறுத்தி, பிராணவாயுக்களை சிரவில் யோகாப்பியாசத்தில் நிஷேதித்து, "ஓம்" என்னும் அக்ஷர பிரும்மத்தை தியானித்தவர்களாகிபந்தத்தினின்றும்விடுபட்டு உத்தம கதியை அடைவார்கள். வேறு சிந்தையில்லாமல் எவன் நித்திய யோகம்செய்பவனோ அவன் பகவானை எளிதாகப்பார்க்கத் திறமையடைவான். பிரும்மலோகம் முதற்கொண்டு ஸமஸ்தலோகங்களுக்கும் பிறப்புண்டு. எவன் பகவத்தியானமடைந்தவனோ அவனுக்கு ஜநநமரண கிலேசங்கள் கிடையாது. பிரும்மனுக்கும் 1000 யுகங்கள் பகலும் 1000 யுகங்கள் இரவுமாக இருக்கின்றது. ஆகையினால் நசிக்கப்படாதது ஒன்றுமில்லை. ஆகையினால் யோகத்தியானமே சிறந்ததாகும். ஒருவித நாசமும், பிறப்பும் அற்றது பரபிரும்மமேயாகும். அதுவே அக்ஷரமாகும். அதைக்காட்டிலும் வேறு உயர்ந்தது ஒன்றுமில்லை. அவ்வக்ஷரத்தினிடமாய் சகலமும் பிறந்தது. அவ்வக்ஷர ரூப

பக்தியினால் அல்லாமல் வேறுவதத்தில்சுகத்தை அடைவது அரிதாகும். ஆகையினால் ஜநநமற்றநிலையைப் பெறுவதற்குரிய அக்ஷரப்பிரும்மத்தியாநம் செய்து முக்தி பெறுவது யுக்தமாகும்.

## 9 வது ராஜவித்தியா ராஜகுஹியயோகம்.

ராஜவித்தியா என்றால் வித்தைகளுக் கெல்லாம் சிறந்தது ராஜகுஹியம் இரகசியங்களுக்குள் உத்தமமுமானது யோகம் அடைவது. ஆகவே வித்தைகளுக்கெல்லாம் சிறந்ததும் இரகசியங்களுக்கெல்லாம் சிறந்துமான தர்மத்தை அடைவதென்று பொருள் பட்டு இராஜவித்தியா இராஜகுஹிய யோகம் எனப்பேர்பெற்றது. இந்த தர்மத்தை அதாவது சுவரூபத்தை அறியக்கூடிய இராஜயோகத்தை அடைய சிரத்தை அடையாதவன் ஜநந மரணதுக்கத்தையே பெறுபவன் ஆவான்.

காற்று எங்கும் எவ்விதம் வியாபகமாயுள்ளதோ அவ்விதமே சர்வ பூதங்களும் பகவானிடம் உளதாக இருக்கின்றது. பிரளய காலத்தில் யாவும் பகவானிடம் ஒடுங்கிவிடுகின்றன. மறுபடி பகவானால் சிருஷ்டிக்கப்படுகின்றன. மகான்கள் பிரகிருதியில் உட்படாமல் தைவீகமான சமம் தமம் ஆகிய மார்க்கங்களை ஆசிரியித்து பகவானை ஒரே மனமாய் பஜிப்பார்கள்.

பகவான் சகல தேவதாரூபமாக இருக்கின்றமையினால் எவன் எவ்விவ்வி தமான தெய்வங்களைத் துதித்தாலும் அந்தந்த தெய்வ ரூபியாய் அந்தந்த பலன்களை தந்தருள்வார். பகவானிடம் செய்கின்ற சகல கர்மங்களை அர்ப்பணம் செய்கின்றானோ அவனே சிறந்தவன். பகவான் விஷயத்தில் பக்தி சிறந்ததல்லாமல் ஆடம்பரம் அவசியமன்று. புஷ்பம், பழம், ஜலம்ஆகிலும் பக்தியினால் கொடுத்ததை பகவான் பெற்று அவனுக்கு மேன்மையைத்தருவார். உலகில் பகவானுக்கு துவேஷிகிடையாது. அவர் யாவரிடத்திலும் சமமாயுள்ளவர். ஆகையினால் ஒருவன் அவரை துவேஷிப்பவனாயினும் பக்திசெய்தவனானல் அவர் அவனை நேசிப்பார். துவேஷியாயானாலும் பக்தியினால்தர்மிஷ்டனாவான். பக்திமான் ஒரு நாளும் கெடான். எவ்விதமானவர்ணத் தானாகிலும் பக்தியினால் முக்தி பெறலாகும்.

## 10-விபூதி யோகம்.

விபூதி என்றால் மகிமை யோகம் என்றால் அடைதல் பகவானுடைய மகிமையை அடைதல் எனப்பொருள் பட்டு "விபூதியோகம்" என்னப்பட்டது.

பகவான் அர்ஜுனனுக்குச் சொல்லுவது. நான் தேவர்களுக்கெல்லாம்ஆதியாக உள்ளவன். என்னை மகருஷிகளும், தேவர்களுங்கூட அறிய வல்லவர்களல்ல. எவன் என்னை அநாதியாகவும், பிறப்பற்றவனென்றும், யாவர்களுக்கும் ஈச்வரனென்றும் அறிகின்றானோ அவன் சகல பாபங்களினின்றும் விடுபடுவான், ஜனங்களுக்குண்டாகின்ற புத்தி, ஞானம், பொறுமை, ஸத்தியம், சுகம், துக்கம் முதலியவைகள் என்னாலேயே ஏற்படுகின்றன. சப்தமகா ரிஷிகளும், நான்கு மநுக்களும் என்னருளால் சிருஷ்ட்டிக்கப்பட்டு அவர்களால் உலகமும், ஜனங்களும் சிருஷ்ட்டிக்கப் பட்டார்கள். எவன் என்னையேசகலத்திற்கும் உற்பத்திகாரணனென்றும், என்னாலேயே யாவும் உண்டாகின்றன வென்றும் நினைத்து என்னிடம் மனம்வைத்து என்னையேபஜித்து என்னிடமேசந்தோஷித்து இருப்பவனோ அவனுக்கு ஞானக்கண்ணை தருவேன். அதனால் அவன் என்னை அறிவானாவான். அவர்களுக்கு அன்பினால் அஞ்ஞான இருளைப்போக்கி பிரகாசமான ஞானதீபத்தினால் ஆத்மசாக்ஷியாக யிருந்து இரக்ஷிப்பேனாவேன். நானே ஒவ்வொரு தேஹத்திலும் ஆத்மசாக்ஷியாக விருப்பவன் நானே சகல பூதங்களுக்கும் ஆதியாகவும், மத்தியமாயும், அந்தமாயுமிருப்பவன். சகல தேவர்களிலும் மனிதர்களிலும், ஜந்துக்களிலும், ஸ்தாவரங்களிலும் சகல வஸ்துக்களிலும் சிறந்தவனாக இருக்கின்றவன். அது எப்படி எனில்; வெளிச்சங்கொடுப்பதில் உயர்ந்த சூரியன் நான்தான். நக்ஷத்திரங்களில் சந்திரனும், வேதங்களில் சாமவேதமும், தேவர்களில் இந்திரனும், இந்திரியங்களில் மனமும், பின்னும் இவ்விதமே ஒவ்வொன்றிலும் உயர்ந்தவைகள் ஆகின்றன. அவைகள் நானேயாவேன்.

## 11-வது விசுவரூப தரிசனம்.

விசுவம் என்றால் ப்ரபஞ்சம், ரூபம், வடிவம், தரிசனம் என்றால் காண்பித்தல்பூமி முதலிய பிரபஞ்ச வடிவத்தை காண்பித்தல் எனப்பொருள்பட்டு விசுவரூப தரிசந மெனப்பேர் பெற்றது.

அர்ஜுனன் பகவானை ... அவருடைய விசுருப
த்தை காண்பிக்க வேண்டுமென பகவான் தரிசனம் கொடுக்க நினைத்து அர்ஜுனனைப்பார்த்து சொன்னதாவது; அர்ஜுனா ! என்னிடம் நீ சகல உலகங்களையும், தேவர்களையும் இந்த இடத்திலேகாண்பாய். ஆகிலும் கேவலம்இந்தக்கண்ணால் பார்க்கமுடியாது எனச்சொல்லி ஞானதிருஷ்ட்டியதைத் தந்தருளி விசுவரூப மெடுத்தனர். அர்ஜுனன் அவரிடமாய் ஏககாலத்தில் யாவையுங்கண்டு மகிழ்ந்து துதிக்கலாயினன்,பகவன்! உம்மிடமாய் சகல தேவர்களையும், சகல சராசரங்களையும் பிரும்மனையும், ரிஷிகளையும், காண்கிறேன். உம்மைஎன்னால் பார்க்கக்கூடாமலிருக்கின்றது; ஏனெனில்உம்மிடமாய் கிரீடத்தையும், சக்கிரத்தையும், தரித்து, ஒளிக்கூடம்போல் விளங்குகின்றீர். தாங்கள், சந்திரனையும் சூரியனையுங் கண்ணாகவும், அக்கினியை வதனமாயும், அடைந்திருக்கக் காண்கின்றேன். தங்களிடமாய் தேவர்கள், ருஷிகள் முதலியவர்கள் ஸ்துதிக்கக் காண்கின்றேன். உம்முடைய விசுவரூபத்தைக்கண்டு சகல உலகமும் பயமடையவும், நானும் பயமடைகின்றேன் தங்கள் வதநத்தில் துரியோதநன் சகல பரிவாரங்களோடு புறப்படக் காண்கின்றேன். பகவன்! உம்மைத்தவிரவேறொன்றும் இல்லை.யாவற்றிற்கும்தாங்களே காரணம். தாங்கள்மகாபுருஷாள்! நான்தங்கள் மகிமையை அறியாமற்போனேன். என்னை மன்னிக்கவேண்டும் என பலவிதமாய்ப் பிரார்த்திக்க பகவான் உடனே விசுவரூபத்தை மறைத்து முன்போல் ஆயினர். அர்ஜுனனும் மிக்கமகிழ்ந்து பகவன்! முன்போல் ஆனேன், என்றனன். கிருஷ்ணபகவன் சோல்லுவது அர்ஜுனா! இவ்வித விசுவரூபத்தைத்தேவர்களும்பார்க்க ஒண்ணாது. எவன் என் நிமித்தமே கர்மங்களை செய்பவனோ என்னிமித்தம் பத்தி அடைந்தவனோ, சகல மதங்களினிடமும் வைரம் அற்றவனோ, அவனே என்னைச் சேர்வான்.

## 12. பக்தியோகம்.

பக்தி என்றால் அன்பு, யோகம் என்றால் அடைதல் பக்தி அடைதல் அதாவது பக்தியைச் செய்தல் எனப்பொருள்பட்டு பக்தியோகம் எனப்பேர்ப்பட்டது.

அர்ஜுனன்சொல்லுவது கிருஷ்ணு! தங்களிடம் பக்தியைச் செய்பவர்களில் நன்ருய் யோகம் அறிந்தவர்களெவர்கள். பகவான் சொல்வது :—

அர்ஜுனா! எவன் என்னிடம் மனதைநிறுத்தி சிரத்தையுடன் உபாசிக்கின்ருனே அவனே யோகசிரேஷ்ட்டன். அக்ஷரரூபமாகிய தும், வியக்தமற்றதும், எங்கும் உள்ளதும், ஆகிய பிரும்ம ரூபியாகியஎன்னை தியானித்து இந்திரியநிக்கிரகம் செய்து சமபுத்தியுடையவர்கள் என்னை அடைவார்கள். நான் அவியக்தமாயிருக்கின்றமையால் என்னைக்காணும் விஷயத்தில் மிகவும் கஷ்ட ஆகும். எவன் சகல கர்மங்களையும் என்னிடம் அர்ப்பித்து என்னையே உபாசிக்கின்ருனே அவனை சம்ஸாரபந்தத்தினின்றும் விடுவித்து ரக்ஷிப்பேனுவேன். ஆனுல் என்னிடம் மனதை நிறுத்தித்யானம் செய்வது அரிது என்ருல் அப்பியாசயோகத்தினுல் அவ்விதத்தியாநத்தைப்பெற யத்தினம் செய்வாயாக. அப்பியாசம்செய்வதும் கஷ்டம் என்ருல்; என்னை உத்தேசித்து கர்மங்களைச் செய்வாயாக. அக்கர்மங்களைச் செய்வது அசாத்தியமாயிருந்தால் என்னிடம் பக்தியைச்செய்வாயாக. எவன் ஒருவனையும் துவேஷிக்காதவனும், யாவருக்கும் நேசனும், அகங்காரம் அற்றவனும், சுகதுக்கங்களில் சமமானவனும்,என்னிடமேமனம்வைத்தவனுமானவனே அம்மனிதனே எனக்குப் பிரியமாகியவன். எவனைக்கண்டால் உலகம் துக்கிக்காதோ எவன் உலகத்தை இம்சிக்காமலிருக்கின்றவனே, ஒன்றையும் அபேக்ஷிக்காதவனே, சுசியுடையவனே, சாமர்த்தியமுடையவனே, உதாஸீநனே,கவலையற்றவனே,ஒன்றையும்செய்ய யத்தினம்செய்யாதவனே, மாநாவமாநம், சத்ருத்துவம் மித்திரத்துவம்,இவைகளில் சமபுத்தியுடையவனே,உஷ்ணம் சீதலம்,நிந்தை ஸ்துதி இவைகளில் சமபுத்தி யுடையவனும், கிடைத்தவைாயிலும் சந்தோஷம் அடைகின்றவனே ஒன்றை இருப்பிடமாய் உடையாதவனே, திருடமான பாவனையுடையவனே, அவனே எனக்குப் பிரியமானவன்.

## 13. க்ஷேத்திரக்ஷேத்திரஞ விபாகயோகம்.

க்ஷேத்திரம் என்ருல் சரீரம் க்ஷேத்திரஞனென்ருல் ஆத்துமா, விபாகம் என்ருல், பகுத்தல் யோகம் என்ருல் அடைதல்ஆகவே

சரீரத்தையும் ஆத்துமாவையுஞ் பகுத்து அறிதல் எனப்பொருள்பட்டு க்ஷேத்திர க்ஷேத்திரஞவிபாக யோகமெனப் பட்டது. பகவான் அர்ஜுனனுக்கு அறிவித்தது:—

அர்ஜுனா! இந்த சரீரம் க்ஷேத்திரம் என்று சொல்லப்படும். இச்சரீரத்தை அறிந்தவன் க்ஷேத்திரஞன். அந்தக்ஷேத்திரஞன்நானேயாவேன். க்ஷேத்திரம் எப்படி ஏற்படுவதெனில், பஞ்சபூதங்கள், (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம்) அகங்காரம், புத்தியும், பத்து இந்திரியங்களும்(கண், மூக்கு, காது, நாவு, தோல் முதலியனவும். அவியக்தம், அதாவது-மாயாசக்தியும், மனதும், சப்தாதிவிஷயங்களும், இச்சை, துவேஷம், சுகம், துக்கம் ஆகிய இவைகளின் ஆசிரியமாகிய அந்தக்கரண சதுஷ்டயங்களும் சேர்ந்து ஏற்பட்டன. ஞானம் என்பது அபிமானமடையாதிருத்தல், தம்பமின்மை, இம்சை செய்யாமலிருத்தல், பொறுமை, அடக்கம், ஆசாரியனை நேசித்தல் ஆசாரம், ஸ்திரபாவம், தன்னை அடக்கிக்கொள்ளல், இந்திரியங்களின் விஷயங்களில் வைராக்கியம், அகங்காரமின்மை, பிறப்பிறப்பு கிழத்தனம் வியாதி துக்கம் தோஷம் இவைகளை அறிதல், சேர்க்கையின்மை, புத்திரமித்திராதிகளில் பற்றின்மை, இஷ்டம் அநிஷ்டம் இவைகளில் சமசித்தம் அடைதல், வேறு சிந்தையில்லாமல் என்னிடம் பக்தியடைதல், ஏகாந்தமான இடத்தில் வசித்தல், ஜனக்கூட்டத்தில் ஆசையின்மை, ஆத்மஞானத்தைஅடைதல், தத்துவஞானத்தின் பிரயோஜனத்தை அறிதல் ஆகியவைகள் ஞானம் என்னப்படும். இவைகள் அல்லாதது அஞ்ஞானம் என்னப்படும். உலகில் ஒவ்வொருவனும் அறியவேண்டியது ஆதியந்தமில்லாத பரபிரும்மமேயாகும். அப்பிரும்மம் ஒவ்வொருவனுடைய கைகால் முதலான அங்கங்களிலும், கால், சிரசுமுதலிய இடங்களிலும் வியாபித்து,எங்கும் நிறைந்திருக்கின்றது அதுவே சகல இந்திரியகுணங்களை ஆசிரியித்தும் குணமுள்ளதாயும் நிர்க்குணமாயும் உள்ளது. மேற்சொல்லியவைகளே அறியவேண்டியது. இவைகளைஎன்னிடத்தில்பக்தியுடன் அவைகளையறிந்து என்னுடைய நிலைமையை அடைவான்.

பிரகுருதி அதாவது மாயையும், புருஷனையும் (ஜீவன்) அநாதியாக நினைத்துக்கொள். நாசபூதனும் விகாரம் அடையக்கூடியதும், குணம் பெற்றதுமானவைகள் பிரகிருதியினால் பிறந்தன. காரியம் சரீரம்,காரணம் இந்திரியம்,இவைகளின் செய்கைக்கு பிருகி

ருதிகாரணமாகும். சுகதுக்கங்களில்ஜீவன் அதாவதுபுருஷன்காரணமானால் புருஷன் பிருகிருதி சம்பந்தத்தால் அபிவிருத்தியானால் வினையும் குணங்களுக்குட்பட்டு ஜன்மம் முதலியவைகளும் அடைகின்றான். அப்புருஷனே இச்சரீரத்தில் தனியாய் நின்று சகலமும் அடைந்து சரீரத்தை நடத்துகின்றவனாகையினால் மகேசுவரனென்றும்; ஆத்ம என்றால் மனசுக்கும், சசரீத்திற்கும் பெயராகையாலே இவைகளுக்கு எல்லாம் உயர்ந்ததாகையினால் பரமாத்மாவென்றும் பெயர் அடைகின்றான். இவ்விதம் பிருகிருதியின் குணங்களையும் அதனால்புருஷன் அடைகின்ற நிலைமைகளையும் அறிந்துசரீரம்போனகாலத்திலும் சேர்ந்திருந்தும் மறுபடியும் சேர்ந்தவனாகான். சிலர் தங்களை, தியானத்தினாலும் சிலர்புத்தியாலும், சிலர் சாங்கியயோகத்தினாலும் (ஆத்மஞானம்) சிலர்கர்மயோகத்தினாலும் கண்டறிவார்கள். அவ்விதம் கண்டறிய திறமையில்லாதவர்கள் ஆசாரியர்களால் அறிவார்கள்.

உலகில் ஸ்தாவரமாயினும் ஜங்கமமாயிலும் யாவும் க்ஷேத்திரம், க்ஷேத்திரஜன் ஆகிய இவ்விரண்டும் கூடியே ஆகும். கடம் உடையினும் ஆகாசம் நசிக்காததுபோல் சரீரம்போனால் பரமேசுவரனாகிய ஆதமா நசியாததென்றும் சர்வபூதங்களும் சமமானதென்றுணர்ந்தவன் ஆத்மஞானி. தன்னையே ஒருவன் இம்சித்துக்கொள்ளுவது அவிவேகமல்லவா; அவ்விதமே எங்கும்நிறைந்திருக்கும் ஆத்துமகோடிகளைத்தானே என்று நினைத்தவன் உத்தமகதி அடைவான். சரீரத்தினால் உண்டாகின்ற ஒவ்வொரு காரியமும் பிரகிருதியின் தொழில் என்றுணர்ந்து தனக்கு ஆவது ஒன்றுமில்லை என்றும் நினைத்து தனியாக நிற்பவன் ஈசனை அறிவானாவான். சரீரம் கேவலம் பிரகிருதியினால் கற்பிதம். பரமாத்மாவோ அனாதியாகி ஆகையினால் சரீரத்துடனிருந்தும் பற்றில்லாதவனே மேன்மையடைந்தவன். பரமாத்மா சரீரத்திலிருப்பினும் பற்றில்லாமலேயிருக்கின்றார். ஒரேசூரியன் உலகை பிரகாசிக்கச்செய்வதுபோல் பரயாத்மா இச்சரீரத்தைப் பிரகாசிக்கச்செய்வாராவார். ஆகையினால் எவன் க்ஷேத்திரத்தையும் க்ஷேத்திரஞனையும் ஞானத்தினால் அறிகின்றானோ அவனே முத்திபெற்றவன்.

# 14. குணத்திரயவிபாகயோகம்.

குணதிரியம் என்றால் ரஜஸ், தமஸ் ஸாத்விகம் என்னும் மூன்று குணங்கள், விபாகம் பிரிவு யோகம் அடைதல் ஆகாவே மூன்று குணங்களைபிரித்து அறிந்து சிறப்புற்றதை அடைதல் எனப் பொருள்பட்டு குணதிரியவிபாகயோம் எனப் பேர்பெற்றது.

கிருஷ்ண பகவான் சொல்லுவது அர்ஜுனா! திருகுணங்கள் என்னிடம் கர்ப்பமாயுள்ளன. அவைகளிடமாய் உலகம் சிருஷ்டியாகின்றது. உலகில் ஒவ்வொரு சராசரமும் உண்டாவதற்கு எது பீஜமோ அதற்குநான் பீஜமாகின்றேன். பிரகிருதியினால் பிறந்தவை மூன்று குணங்கள். அவை ரஜஸ், தமஸ், சாத்விகம் என்பவை. அக்குணங்கள்தான் நாசமற்றதும், அஞ்ஞானமற்றதுமான ஜீவனைக் கட்டுபவை. அக்குணங்களில் ஸாத்துவிககுணம் சிறந்தது. அதுஞானத்தையும் சுகத்தையும் தந்திடும். ரஜோகுணம் கேவலம்ராகத்தை அதாவது ஆசையைத் தரக்கூடியது. கிடைக்கக்கூடாத பொருளில் ஆசையையும், கிடைத்தபொருளில் ஆசையையும் உண்டாக்கக் கூடியது. தமோகுணம் மூடத்தனத்தினால் உண்டாவது. இக்குணத்தினால் ஜீவனுக்கு பிரமாதம், சோம்பல், நித்திரை முதலியவைகள் உண்டாகும். இக்குணங்களில் ஒரேகுணம் முதன்மையாயிருக்கின் மற்றிரண்டும் ஒடிங்கிவிடும். ஒருவனிடம் ஞானம் அதிகரித்திடும் ஆகில் அவனிடம் சத்துவகுணமிருக்கின்றனவென்றறியலாம். ஒருவனிடம் லோபம், முயற்சி, காரியங்களை ஆரம்பிப்பது, ஓய்வில்லாமலிருத்தல் கோரிக்கை ஆகிய இவைகள் ரஜோகுணகம் மிகுந்த காலத்தில் உண்டாகும் என்று அறியலாம். தமோகுணம் விருத்தியடைந்தால் அறிவில்லாமை, முயற்சியின்மை, கலவரம், மோகம் முதலியவை உண்டாகும். சத்துவகுணம் விருத்தியடைந்த காலத்தில் எவன் உயிர்விடுகின்றானோ அவனுக்கு நல்லகதி உண்டாகும். தமோகுணம் நீண்டகாலத்தில் உயிர்த்துறந்தவன் கர்மானுஷ்டானத்திற்குறியவனாகப்பிறப்பான். மூடகுணமாகிய தமோகுணம் நீண்டகாலத்தில் இறந்தவன் மூடயோனியில் பிறப்பான். சத்துவகுணமுடையவர்கள் தேவர்களாகவும், ரஜோகுணமுடையவர்கள் மனுஷியர்களாகவும், தமோகுணமுடையவர்கள் பசு பக்ஷி முதலியவைகளாகவும் பிறப்பார்கள். ஆகவே குணங்களே சுகதுக்கங்களுக்குக் காரணமாகின்றன.

எவன் ஒன்றையும் விரும்பாதவனோ, எவன் உதாசீனனோ, எவன் குணங்கள் மாறிக்கொண்டுவரும் தன்மையுடையவையென்றறிந்து அக்குணங்கள் வந்தகாலத்திலும் அவைகளுக்குச் சலிக்காமலிருப்பவனோ, அவனே திரிகுணங்களுக்கும் வெளிப்பட்டவனாவான். அல்லது எவன் பகவானாகிய என்னையே நினைத்தவனாக யிருப்பவனோ அவனும் திரிகுணங்களுக்குட்படாமல் என்னையே அடைவான்.

## 15-வது புருஷோத்தம யோகம்.

புருஷோத்தமனென்றால் புருஷசிரேஷ்டன் அதாவது பகவான், யோகம் என்றால் அடைதல் ஆகவே பகவானை அடைதல் எனப்பொருள்பட்டு புருஷோத்தமயோகம் எனப்பேர்பெற்றது.

பகவான் அர்ஜுனனுக்குச் சொல்லுவது:—சம்சாரம் என்பது ஓர் விருக்ஷம். அவ்விருக்ஷத்திற்கு பிரும்மம் வேராகயுள்ளது. அகங்காரம் முதலியவை கிளைகள். வேதங்கள் இலைகள். ஆகவே இச்சம்சாரவிருக்ஷம் அசுவத்தம் என்று சொல்லப்பட்டது. அசுவத்தம் என்றால் நாளையில்லாதது என்று பொருள். இத்தத்துவத்தை அறிந்தவன் ஞானி. அவன்தான் அவ்விருக்ஷத்தை விஷயா சக்தியற்றிருப்பதென்னும் சஸ்திரத்தினால் வெட்டித்தள்ளி நல்ல நிலையைத் தேடுவான். ஜலத்தில்காணும் சூரியபிம்பம் ஜலம்வற்றியகாலத்தில் எப்படி ஜலத்தோடு நிஜமானசூரியனை அடையுமோ அப்படியே இந்திரியங்களில் தோன்றிய ஜீவன் விஷயங்கள் ஒடுங்கியபோது இந்திரியாம்சங்களோடு என்னைச்சேர்வான். ஜீவன் ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரம்போகும்போதும் அச்சரீரத்திலுள்ள இந்திரியாம்சங்களோடே அவ்விதமே செல்லுவதுமாகும். காற்று ஒருபுஷ்பத்தின்மீது ஆசிரயித்து வாசனையைக் கொண்டுபோவதுபோல் ஜீவன் இந்திரியங்களில் குடிகொண்டு விஷய சுகங்களைப் பெறுவதாகின்றது. ஞானிகள் ஒருசரீரத்தைவிட்டு மற்றொருசரீரம் போவதையும் முன்சரீரத்தில் நிலைகளையும் அறியும் வல்லமையுடையவர்கள். உலகில் சகல அம்சங்களிலுமுள்ள குணங்கள்நானே. உலகில் க்ஷரம் அதாவது நாசமுடையவஸ்து, அக்ஷரம் நாசமில்லாத வஸ்து என இரண்டேஉள. நான் இவைகளுக்கெல்லாம் தாண்டியிருப்பவன். என்னைத்தான் புருஷோத்தமனென்பார்கள். யோகிகள் என்னையே உபாசித்து முக்திபெறுகின்றனர்.

## 16-வது தைவாசுர [torn] த்விபாக யோகம்.

தைவ, தேவசம்பந்தமுடையதும், அசுர, அசுரசம்பந்தமானது மான, சம்பத் சம்பத்தினுடைய விபாகம் பகுத்தலின் யோகம் அடைதல் ஆகவே தைவசம்பந்தமுடையதும் அசுரசம்பந்தமுடையதுமானசம்பத்தை பகுத்தறிந்து அவற்றில் சிறப்புற்றதை பெருவதென்று பொருள்பட்டு தைவாசுரசம்பத்விபாகயோகம் எனப் பேர் பெற்றது.

பகவான் சொல்லுவது :— பயமின்மை, அந்தக்கரண சுத்தி, ஞானம், ஈவு, வேதம் ஓதுதல், தர்மங்கள்செய்தல், இம்சை செய்யாதிருத்தல், லோபமின்மை, லஜ்ஜை, முதலிய நற்குணங்கள் தைவஸம்பத்துகளாகும்.

கர்வம், அபிமானம், கோபம், முதலியவைகள் அசுரசம்பத்துக்களாகும்.

தேவஸம்பத்துக்களுடையவர்கள் மோக்ஷத்தின் பொருட்டும், அசுரசம்பத்து அடைந்தவர்கள் பந்தத்தின்பொருட்டுமாவார்கள்.

அசுர சம்பத்துடையவர்களிடம் ஆசாரம், சத்தியம் முதலியவை இரா.

ஈசுவரன் இல்லையென்றும் எல்லாம் இயல்பாக உண்டாகுமென்றும் சொல்லுகிறவர்களும்அவர்களே. தாங்கள்கெட்டுப்போவதுடன் உலகத்தையும் நசிக்கச்செய்வார்கள். அவர்கள்தான் கொலைமுதலியவைசெய்து பொருள்தேடி மதங்கொண்டு திரிவார்கள். அவர்கள் பாபகர்மங்களைச் செய்து அசுரயோனியில் பிறந்து மேன்மேலும் அதோகதியடைவார்கள்.

தேவசம்பத்தை யடைந்தவன் மேன்மை அடைவான். தேவசம்பத்தின் பெருமை வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

## 17-வது சிரத்தாத்திரயவிபாகயோகம்.

சிரத்தை என்றால் அக்கரை, திரயம் என்றால் மூன்று, விபாகம் என்றால் பகுத்தல், யோகம், அடைதல் ஆகவே மூன்று சிரத்தையைப் பகுத்தறிந்து அவற்றில் சிறப்புற்றதை அடைதல் எனப் பொருள்பட்டு சிரத்தாத்திரயவிபாகயோகம் எனப் பேர்பெற்றது

பகவான் சொல்லுவது. சிரத்தை சாத்துவிகம், இராஜஸம், தாமதம்என மூன்றுவகைப்படும். இச்சிரத்தை பூர்வஜன்மவாசனைக்குத்

தக்கவாறு உண்டாகும். இச்சிரத்தை ஆகாரத்தினாலும் ஏற்படும். அது எவ்விதமெனில் ரஸமுடையதும், ஆயுஸ்ஸு, பலம்முதலியவைகளை விருத்திசெய்யும் ஆகாரம் சாத்துவிகர்களுக்கும், காரம், புளிப்பு, உஷ்ணம், உடைய பதார்த்தங்கள் ராஜஸர்களுக்கும், ரஸமற்றதும், நாற்றமுடையதும், இச்சலும், ஆகிய பதார்த்தங்கள் தமோகுணமுடையவர்களுக்கும் ஆகும்

பலனை எதிர்பாராமல் கர்மங்களைச் செய்பவன் சிரத்தை சாத்துவிகம். பலனை எதிர்பார்த்து தம்பத்துடன் செய்பவன் சிரத்தை ராஜஸம். மந்திரம், தக்ஷிணை, சிரத்தை முதலியவை இல்லாமல் செய்கின்றவன் சிரத்தை தாமதம் ஆகும்.

மேற்சொல்லிய சிரத்தைகளில் எவன் சாத்துவிக சிரத்தை அடைந்தவனோ அவனே சிறந்தவன். அச்சிரத்தையைப் பெறுவதே நலமாகும்.

## 18-வது ஸந்நியாசயோகம்.

ஸந்நியாசம் என்றால் விடுகை, யோகம்- அடைதல் ஆகவே விஷயாசக்தி முதலியவைகளை விடும் சாமர்த்தியத்தை அடைதல் எனப் பொருள்பட்டு ஸந்நியாசயோகமெனப் பேர்பெற்றது.

பகவான் சொல்லுவது:—காமியபலனைத் தரக்கூடிய கர்மங்களைவிடுவதும், சர்வகர்மங்களிலும் பலனை விடுவதும் சந்நியாசமாகும். விடுவதிலும் தியாகம், யஞம், தானம், தவம் முதலியவைகளை ஒருநாளும் விடத்தகாது. ஏனெனில், அவை மனிதர்களுக்கு பரிசுத்தத்தைத் தருபவைகள்.

கர்மத்தின்பலன் இஷ்டம், அநிஷ்டம், மிசிரம் என மூன்றுவகைப்படும். இவைகள் கர்மபலனை விடாதவர்களுக்கு உண்டாகும். சகலகர்மங்களும் முடிவுபெறுவதற்கு அதிஷ்டானம், கர்த்தா, கரணம், சேஷ்டை, தைவம் என்று ஐந்துகாரணங்கள்.

ஞானம், தெறிந்துகொள்ளும்விஷயம், ஞானமுடையவன் என ...கர்மோபதேசம் மூன்றுரூபம் உடையன. கரணம், கர்ம, கர்த்தா ...ஆன கர்மசங்கிரகமும் மூன்றுவிதம். எவன் இவைகள் அறிந்துதான் ...கர்த்தா என்று அபிமானம் அடையாமலிருக்கின்றானோ அவன் ...ஞானி. அவன் உலகை நாசம் செய்தவனாகிலும் நாசம் செய்தவனா...ான்.

ஆகவே உலகில் நான்கு வர்ணங்களிலும் சுவபாவிகமான குணங்களும் கர்மங்களும் ஏற்படுகின்றன. அந்தந்த வர்ணத்தான் அந்தந்த கர்மங்களுக் குட்படவேண்டும். அவர்கள்தான் சித்தியடைவார்கள். தன்தொழில் குணமற்றதாயினும் இதரர்களுடைய சிறந்ததாயினும் தன்கர்மாவைச் செய்வதே சிறந்ததாகும். ஒவ்வொருவனும் அவனவன் சுவதர்மங்களைச் செய்துவரில் பகவானுக்குப் பிரியன் ஆவான். பிறகு சாசுவதமான பதவியை அடைவான்.

அர்ஜுனா! நீ சண்டைசெய்வதில்லை என்று சொல்லினும் பிரகிருதியின் குணம் அதாவது க்ஷத்திரிய சுவபாவம் உன்னை யுத்தஞ்செய்யத் தூண்டும். அப்படி யுத்தஞ்செய்ய மனமடையாமற் போனாலும் ஈசுவரன்சகலமனத்திலும் குடிகொண்டிருக்கின்றமையினால் அவரவ ஆட்டிவைத்து நடப்பிப்பார். ஆகையினால் அவரை சரணமடைவாயாக.

## நீதிகள்.

1. பகவான் அர்ஜுனனைத் தூண்டி துரியோதனன் முதலானோர்களை கொல்லச்செய்தமையால் துஷ்டர்களை அவ்விதமே நாசிக்கச்செய்யவேண்டுமென் றேற்படுகின்றது.

2. பகவான் உலகில் தர்மத்தை நிலைநிறுத்த ஸ்ரீகிருஷ்ணவ...ம் செய்தாரென்றமையால் சாதுக்கள் பரோபகாரஞ்செய்வதில் ...முள்ளவர்களாயிருப்பார்...ள் என்றேற்படுகின்றது.

3. கௌரவர்களும் பாண்டவர்களும் விரோதம் அடைந்தமையால் உலகில் தனமே விரோதத்திற்கு இடம் என்றேற்படுகின்றது.

4. ஸ்ரீ கிருஷ்ணன் பாண்டவர்கள்பக்ஷம் சேர்ந்தமையினால் சாதுக்கள் சாதுக்களுடன் சேர மனமடைவார்களென் றேற்படுகின்றது.

5. ஸ்ரீ கிருஷ்ணன் தாழ்ந்த தொழிலாகிய ரதசாரத்தியம் செய்ய ஒப்புக்கொண்டமையினால் மித்திரர்களுடைய பெருமையைக்காட்டுகின்றது.

6. பகவான் மிக்கபலம்கொண்ட கௌரவர்களை தான்கொல்லாமல் அர்ஜுனனைக்கொண்டே கொன்றமையினால் பகவான் சாக்ஷியாக இருந்து யாவையையும் நடப்பிக்கின்றார் என்பதை நன்கு விளக்கிக் காட்டுகின்றது.

7- அர்ஜுனன் யாவர்களையும் கொல்[illegible] வந்து யாவர்களையும் போர்களத்தில் யுத்தஞ்செ[illegible] மனமற்றவனாயி னால் சினேகபாசம் அல்லது விஷயவாசனை வெல்லாதென்று ஏற் படுகின்றது.

8. துரியோதனன் கொடியவனாகிலும் [illegible] னைக்கூடி யுத்தஞ்செய்யவந்தமையால் உண்ட[illegible] நினைக்கக்கூடாதென்பது உண்மையாகின்றது.

9. யுத்தஞ்செய்ய மனமற்றுநின்ற அர்ஜு[illegible] யுத்தஞ் செய் ய பகவான் தூண்டினமையால் சாரதியின் தி[illegible] யம் வந்தகாலத்தில் அவ்விதபண்டிதன் வேண்டுமென்றும் காட்டு கின்றது.

10. அர்ஜுனன் பகவானது வார்த்தையைத் தப்பாது நட த்திபெருமை பெற்றமையால் புத்திமான்களுடைய பெருமையை காட்டுகின்றது.

## ஸ்ரீகிருஷ்ணார்ஜுனர்களின் வினா விடை

அத்தியாயம். 1. அர்ஜுனன் பந்துக்களைக் கொல்லுகின்ற[illegible] யத்தில்விஷாதம் அடைந்து பகவானிடம் முறையிட்டுக்கொண்டது.
பகவான் கேட்டுக்கொண்டிருந்தது.

அத். 2. (i) அர்ஜு. பீஷ்மர் துரோணர் முதலிய பந்துக்களையும் ஆசாரியர்களை எவ்விதம் எர்த்து யுத்தஞ்செய்வேன்?

ஸ்ரீகிருஷ்ணபகவான். க்ஷத்திரியதர்மத்தை [illegible] யுத்தஞ் செய்யவேண்டும்.

(ii) அர். ஸமாதியில் ஸ்திதபிரஞை யுடையவனுக்கு என்ன இலக்ஷணம்? அவன் எவ்விதம் பேசுவான்? எப்படி இருப்பான்? எப்படி நடப்பான்?

ஸ்ரீகிரு. பிரும்மத்தியானம் செய்து வி[illegible] ஆத்தும தத்துவத்தை அறிந்து யாவற்றிலும் சமபுத்தியு[illegible] சாங்கிய யோகத்தை அறிந்தவன்.

. அத். 3. (i) அர். ஞானமார்கம் கர்மமார்கத்திலும் சிறந்ததா இல் கோரமான கர்மத்தில் என்னை ஏன் [illegible] செய்கின்றீர்? எந்த கர்மத்தினால் மேன்மை அடையவேணும்? அதை சொல்லவேண்டும்.

ஸ்ரீ கிரு. கர்மயோகத்தைநாடி சுவதர்மமாகிய கர்மத்தைச்செய்தவன்

(iii) அர். மனிதன் எதனால் தூண்டப்பட்டு பாபம்செய்கின்றான்?

ஸ்ரீ கிரு. பிரகிருதியினால் தூண்டப்பட்டு விஷயவாஸனை அடைந்து அதனால் செய்யக்காரணமாகின்றான்.

அத். 4. அர். கிருஷ்ணவதாரம் செய்வதற்கு முன்னமே சூர்ய கிருஷ்ண யோகவித்தையை சூரியனுக்குஉபதேசம் எவ்விதம்செய்தீர்?

ஸ்ரீ கிரு. நான் அனாதி உலகசம்ரக்ஷணார்த்தம் அவதரிப்பவன்.

அத். 5. அர். கர்மசந்நியாசம், கர்மயோகம் இவைகளில் எது சிறந்தது?

ஸ்ரீ கிரு. இவ்விரண்டில் கர்மானுஷ்டானம் சிறந்தது. ஆனால் பலனாசையில்லாமல் செய்வது அதன் பெருமையாகும்.

அத். 6. (i)அர். மனம் முதலிய அந்தக்கரணங்களை அடக்கியோகம் செய்வது எவ்விதம்?

ஸ்ரீ கிரு. அபியாசத்தினால் செய்துக்கொள்ளவேண்டும்.

(iii) மனம் சஞ்சலத்தினால் யோகபலம் கெட்ட யோகியின் கதியாது ஆகும்?

ஸ்ரீ கிரு. அவன் பலனை பெறாதவனாயினும் நல்ல ஜன்மங்களெடுத்துயோக வாஸனையினால் மேன்மேலும் யோகஞ்செய்து நல்வழிபெறுவான்.

அத். 7. மேற்கண்ட கேள்வியே தொடர்ந்தது.

ஸ்ரீ கிரு. விஞானயோகம் அதாவது ஆத்மஞானம் அடையும் வித்தையையும் அதன் பெருமையையும் அறிந்தவன்.

அத். 8. அர். பரபிரும்மமென்பதெது? அதியாத்மம் என்பதெது? கர்மம் எப்படிப்பட்டது? ஆதிபூதமெது? ஆதிதைவமென்பதெது? அதியஞனெவன்? யோகம் அடைந்தவர்களால் உம்மை முடிவில்எவ்விதம் கண்டறிவார்கள்?

இவைகளின் பொருளை அக்ஷபரப்பிரும்மயோகத்தினால் அறிந்துகொள்.

அத். 9. மேற்சொல்வியகோள்வை தொடர்ந்தது.

ஸ்ரீ கிரு. ஸம்சாரத்தி னின்றும் விடுபட்டு ரஹஸ்யமான ஞானத்தை அடைவதற்குறிய விஷயங்களை ராஜவித்யா ராஜகுஹ்யம் என்னும் யோகத்தினால் அறிந்துக்கொண்டவன்.

அத். 10. அர். தங்களுடையமகிமையை எனக்குசொல்லவேண்டும்.

ஸ்ரீகிரு. என்னுடைய மகிமையை விபூதி என்னும் யோகத்தினுல் அறிவாயாக.

அத். 11. அர். தங்களுடைய விசுவரூபத்தை காண்பிக்கவேண்டும்.

ஸ்ரீகிரு. என்னிடமாய் விசுவ ரூபத்தை பார்ப்பாயாக.

அத். 12. அர். சகுணங்களை தியானித்து பகவானைப்பஜிப்பவர்கள் பிரும்மத்தை தியானம் செய்பவர்கள் ஆகிய இவர்களில் எவன் சிறந்தவன்?

ஸ்ரீகிரு. பக்தியேசிறந்தது. பக்தியோகத்தினுல் அறிந்துகொள்.

அத். 13. அர். பிரகிருதி, புருஷன், க்ஷேத்திரம், க்ஷேத்திரஞன் ஞானம், ஞேயம், ஆகிய இவை முதலானவைகளின் பொருளை சொல்லவேண்டும்.

ஸ்ரீகிரு. க்ஷேத்திர க்ஷேத்திரஞவிபாகம் என்னும் யோகத்தினுலறிந்துக்கொள்.

அத். 14. அர். சத்துவம் ரஜஸ், தமஸ் என்னும்குணங்கள் நீங்கினவன் எப்படியிருப்பான்? அவைகளை எப்படி விட்டிருக்கும்முடியும்?

ஸ்ரீகிரு. அவைகள் வரினும் அக்குணங்களுக்கு உடன் படாமல் யாவற்றிலும் சம்பாவனை அடைந்து இருப்போனே அக்குணங்களினின்றும் விடுபடுவான்.

அத். 15. அர். மேற்கண்ட கேள்வியே தொடர்ந்தது.

ஸ்ரீகிரு. புருஷோத்தம பிராப்தி என்னும் யோகத்தினுல் அறிந்துக்கொள்.

அத். 16. மேற்கண்ட கேள்வியே தொடர்ந்தது.

ஸ்ரீகிரு. தைவாசுர சம்பத் விபாகயோகம் என்பதனுல்அறியவும்.

அத். 17. அர். சாஸ்திர சம்பிரதாயத்தைவிட்டு விருத்தாசாரத்தை அனுசரிப்பவன் கதி என்ன?

ஸ்ரீகிரு. சிரத்தாத்திரய விபாகயோகத்தினுல் அறியவும்.

அத். 18. அர். சந்நியாசம், தியாகம் இவ்விரண்டின் தத்துவத்தை சொல்லவும்.

ஸ்ரீகிரு. மோக்ஷஸந்நியாச யோகம் என்பதனுல் நன்கு அறியவும்

...KANATH...

சுபம். சுபம். சுபம்.